# ‘கரூர் மாவட்டத்தில் கல் குவாரிகளில் முறைகேடு’

By DIN | Published On : 18th September 2022 12:05 AM | Last Updated : 18th September 2022 12:05 AM | அ+ அ அ- |

கரூர் மாவட்டத்திலுள்ள கல்குவாரிகளில் முறைகேடு நடப்பதாக குற்றஞ்சாட்டினார் மணப்பாறை சட்டப்பேரவை உறுப்பினர் ப. அப்துல்சமது.

கரூரில் சனிக்கிழமை மாலை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தது:

மாவட்டத்திலுள்ள குவாரிகளில் விதிமீறல் உள்ளதா என சமூகச் செயற்பாட்டாளர்கள் குழுவினர் சனிக்கிழமை ஆய்வு செய்தோம்.

இதில் ஏராளமான கல்குவாரிகளில் 50 மீட்டர் ஆழத்துக்கு மேல் கல் வெட்டியெடுக்கப்படுகிறது. குவாரிகளில் விதிமுறைகள் மீறப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

சட்டவிரோதமாக, சுற்றுச்சூழலுக்கு எதிராக செயல்படும் குவாரிகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முதல்வர் இப்பிரச்னையில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

அலுவலர்களிடம் கல்குவாரி உரிமையாளர்கள் கூறுவது உண்மையா, குவாரி பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் கருத்துக்கேட்டு, அவர்கள் கூறுவது உண்மையா என்பதை நேரடியாக ஆய்வு செய்ய முதல்வரின் நேரடி பார்வையில் உயர்நிலைக் குழு அமைத்து விசாரித்தால்தான் உண்மை வெளிவரும் என்றார் அவர்.

பேட்டியின்போது மக்கள் சிவில் உரிமைக்கழக தேசியச் செயலர் பாலமுருகன், சுய ஆட்சி இந்தியா கட்சியின் தேசியச் செயலர் கிறிஸ்டினாசாமி ஆகியோர் உடனிருந்தனர்